மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சென்னையிலுள்ள மருத்துவ மனை 'டீச்சிங் ஆஸ்பிடல்' என்ற முறையில் தனி வளர்ச்சி பெற்று இருப்பதாகும். பல்வேறு முறைகளில், பல்வேறு துறைகளில் குழந்தைகளுக்கு வரும் நோய்கள் குறித்து சிறப்புப் படிப்பு படிக்கவும், சிறந்த முறையில் ஆராய்ச்சி நடத்தவும் வாய்ப்பாக இருக்கிறது. மாவட்ட மருத்துவ மனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தி, அதில் சிறந்த மருத்துவர்களைப் போட வேண்டுமென்று ஏற்கனவே திட்டமிட்டு, அது நடைமுறைக்கு வந்து கொண்டு இருக்கிறது.

புதுப்பேட்டையில் அரசு மருந்தகம்

* 150 வினா—**திரு. ஜி. ராமசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், புதுப்பேட்டையில் புதிதாக அரசு மருந்தகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

தோப்பூர் காசநோய் மருத்துவ மனை

* 151. வினா—**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரின் அருகிலுள்ள தோப்பூர் டி. பி. மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரைக்கு அருகாமையில் இருக்கும் ஆஸ்டின்பட்டி டி. பி. ஆஸ்பிடல் ஒன்றுதான் மதுரை மாவட்டத்தில் இருக்கிறது. அதிலே இப்போது சாதாரணமாக